JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI**

**S.T.C.137/2018**

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) 12.08.2025.

**P.W.1 Name: சுந்தர்ராஜ் S/o.** பழனிசாமி

**<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் 11.07.2011 கிரையம் பெற்ற பு.த.சா.ஆ.13ஆவணப்படி கிரயம் பெற்ற நிறுவனத்தின் முழு விவரம் தெரியுமா என்றால் Minda company, Delhi ல் உள்ளது. மற்ற விலாசம் முழுமையாக எனக்கு தெரியாது என்றால் சரிதான், தற்போது நினைவில் இல்லை. பு.த.சா.ஆ.13 கிரையம் பெறும் பொழுது நான் நகை கடையில் ஊழியராக பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். என்னுடைய நிறுவனத்தின் உரிமையாளரும் மேற்படி கிரைய பத்திரத்தில் ஒரு தரப்பினராக உள்ளார் என்றால் சரிதான்.

2. என்னுடைய மற்றொரு பங்குதாரர் சாமியப்பன் எனது நிறுவன உரிமையாளருக்கு சகலை என்று சொன்னால் சரியல்ல. எங்களுடைய பரிவர்த்தனைகள் அனைத்தும் வங்கி மூலமாக நடைபெற்றது என்றால் ஒரு கிரயம் மற்றும் வங்கி மூலமாக நடைபெற்றது. மற்ற கிரயங்கள் ரொக்கமாக பெறப்பட்டது. பு.த.சா.ஆ.13 கிரையம் மட்டும் வங்கி மூலமாக நடைபெற்றது என்றால் சரிதான்.

3. பரிவர்த்தனைகள் அனைத்தையும் நான் வரவு செலவு கணக்கு வைத்துள்ளேன் என்றால் இல்லை. பரிவர்த்தனைகள் அனைத்தும் எனது முதலாளிக்காக நான் செய்ததால் என்னிடம் எந்த வரவு செலவு கணக்கும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.பு.த.சா.ஆ.13 கிரயம் செய்யும் போது மேற்படி தொகை கையிருப்பு இருந்ததா என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. வங்கி கணக்கு உள்ளது.

4. வங்கி கணக்கை தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வங்கி கணக்கை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்று சொல்லிருப்பது வழக்கை இழுத்து அடிப்பதற்காக என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் வங்கி கணக்கு தயாராக இருந்திருந்தால் தாக்கல்செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. கிரய ஆவணங்கள் பற்றிய தகவல்களை எனது வழக்கு ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

5. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், அது போல எந்த தகவலும் வழக்கு ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலை சமயத்தில் வங்கி கையிருப்பு இருந்ததை காட்டுவதற்கான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் கையில் பணம் இருந்ததால் வங்கி சம்மந்தமான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. பான் எண்ணை கிரய ஆவணத்தில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை, சில ஆவணங்களில் பான் எண்ணை காட்டியுள்ளேன்.

6. வருமான வரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லாததால் தான் அவற்றை நான் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வருமான வரி செலுத்தும் அளவிற்கு வருமானம் உள்ளதா என்றால் எனது ஆடிட்டர் சொன்னதால் வருமான வரி கட்டவில்லை. சாந்தகுமார் எதிரி மீது தாக்கல் செய்துள்ள வழக்கு இன்று போடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சாந்தகுமாரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் வேண்டியதில்லை. இந்த வழக்கிற்கும் அவருக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை.

7. இந்த வழக்கில் சாந்தகுமாரை விசாரித்தால் நானும், சாந்தகுமாரும் சேர்ந்து எதிரிமீது வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரிந்து விடும் என்பதற்காக சாந்தகுமாரை விசாரிக்க வேண்டாம் என்கிறேன் என்றால் சாந்தகுமார் யார் என்று எனக்கு தெரியாது. அதனால் விசாரிக்க வேண்டாம். காசோலை தொகைக்கும் கிரய ஆவணத்தில் கண்டுள்ள தொகைக்கும் முரண்பாடுகள் இருப்பதால் வழக்காவணங்களில் அது பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல.

8. 30.10.2017ம் தேதி எதிரி என்னிடம் 13 இலட்சத்தை கடனாக பெற்றதாகவும் அதற்கு ஈடாக 30.11.2017ம் என பின் தேதியிட்டு கோயமுத்தூர் திருச்சி ரோடு கிளை HDFC வங்கி காசோலை எண்.388888 கொடுத்தாகவும் அதை வசூலுக்கு தாக்கல் செய்தால் அது வசூல் ஆகிவிடும் என எதிரி உறுதி அளித்தாகவும், அந்த காசோலையை 04.12.2017ம் தேதியில் என்னுடைய கரூர் வைசியா வங்கியின் மூலம் தாக்கல் செய்ததாகவும், அதன்படி மேற்படி காசோலை எதிரியின் வங்கி கணக்கு முடிக்கப்பட்டதாக கூறி திருப்பப்பட்டதாக கூறுவது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு காசோலை தொகை கொடுக்கும் அளவிற்கு எனக்கு போதுமான வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை